RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s248

OPEN ACCESS

# விவேகானந்தர் - ரூஸோ கல்வித் தத்துவம் ஓர் ஒப்பீடு

பி. செல்வமேரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, தூய மரியன்னை கல்லூரி (தன்னாட்சி), தூத்துக்குடி-628001, தமிழ்நாடு, இந்தியா

# Vivekananda - Rousseau Philosophy of Education A Comparison

P. Selvamary [a, *]

[a] Department of Tamil, St. Mary's College (Autonomous), Thoothukudi-628001, Tamil Nadu, India

* Corresponding Author: marynixon1981@gmail.com

Received: 13-08-2022
Revised: 30-10-2022
Accepted: 07-11-2022
Published: 15-12-2022

Check for updates

## ABSTRACT

Education is the tool that helps to change the behavior of every human being, to bring out the potentials and talents that are hidden in him, to know himself and to bring out the complete nature within him. In order to compare the level of education and teaching methods in European countries and in our country, and what scholars think about them, this article is designed under the title of Vivekananda Rousseau's philosophy of education and a comparison. As the first phase of the study, the books related to this article were selected and read. Indian educationist Vivekananda and European educationist Rousseau's educational philosophies, views on education, objectives of education, educational curriculum, child education, female education, teaching methods, teacher's role and unity and diversity in education system have been collected and compared. Also, the state of the education system of that time and the news about the trends of today's education system are also discussed in detail at the end of this article.

**Keywords:** Philosophy, Education, Vivekananda, Teaching

## முன்னுரை

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்னும் கணியன் பூங்குன்றனாரின் கூற்றுப்படி, உலகில் உள்ள அனைத்து மக்களும் நம்முடைய சகோதர சகோதரிகளே! அது போன்று, உலகில் உள்ள அனைத்து ஊர்களும் நமக்கு சொந்தமானதே. எனினும் ஒவ்வொரு நாடும் உணவு, உடை, தொழில், கலாச்சாரம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் என பல்வேறு வகைகளில் வேறுபட்டு காணப்படுகின்றன.

அவற்றில் கல்வி குறித்து காணும் பொழுது, எண்ணங்களினாலும் செயல்களினாலும் மனிதன் தனித்தன்மை பெற்று இயங்குகிறான். இதற்கு அடிப்படையாக அமைவது அவனுடைய ஆளுமை பண்புகள் ஆகும். இது எல்லையில்லா அறிவையும், ஆய்வுத் தன்மையையும் அடிப்படையாகக் கொண்டது. இவ்வாளுமை முழுமையாக வளர வகை செய்வதே கல்வி. கல்வியானது கற்போருக்கு முதலாவதாகத் தம்மை தாமே அறிய உதவுகிறது. மனிதனுக்குள் இருக்கும் முழுமைத் தன்மையை வெளிக்கொணரும் மற்றும் மலர வைக்கும் செயல்பாடே கல்வியாகும். அத்தகைய கல்வி முறையானது மேலை நாடுகளிலும், நம் நாட்டிலும் எங்ஙனம் இருந்தது, எங்ஙனம் இருக்கிறது, அவற்றிற்கிடையேயான ஒற்றுமை வேற்றுமைகள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## ஆய்வு முறை

ஐரோப்பிய நாடுகளிலும் நம் நாட்டிலும் மேற்கொள்ளப்படும் கல்வி முறைகள் குறித்து ஆய்வு செய்து தீர்மானிக்கும் நோக்கில் இக்கட்டுரையின் பொருண்மை தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆய்வின் முதற்கட்டமாகக் கற்றல் கற்பித்தல் தொடர்பான நூல்கள் பரிந்துரைக்கப்பட்டு வாசிக்கப்பட்டன (Muthumohan, 2000). இவற்றில் ஐரோப்பியத் தத்துவக்கல்வி பற்றிய செய்திகளை அறிந்து கொள்வதற்காக ஐரோப்பிய தத்துவம் என்ற நூலும், பேராசிரியர் நாகராஜனின், கல்விப் புதுமைகளும் மேலாண்மையும், வளர்ந்து வரும் இந்திய சமுதாயத்தில் கல்வி மற்றும் கற்றல் மனித வளர்ச்சி தொடர்பான உளவியல் போன்ற நூல்களும் தேர்வு செய்யப்பட்டு வாசிக்கப்பட்டுள்ளன. இந் நூல்களில் இருந்து கிடைக்கப்பட்ட தகவல்கள் ஒப்பீடு செய்யப்பட்டு, தக்க சான்றுகளுடனும், மேற்கோள்களுடனும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## கல்வித் தத்துவம்

கல்வி என்பது மனிதனின் நடத்தையில் ஏற்படும் மாற்றம் மற்றும் அவனிடம் புதைந்து கிடக்கும் ஆற்றல்களையும் திறன்களையும் வெளிக்கொணர்ந்து மலர்ந்திடச் செய்யும் செயலாகும்.

தத்துவம் என்ற சொல் ஒருவரது அடிப்படை நம்பிக்கைகளையும், வாழ்வியல் கண்ணோட்டத்தையும் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. எதையுமே பகுத்தறிந்து, ஆராய்ந்து, அதன் முழுமையை, உண்மை நிலையை அறிய முற்படுவதே தத்துவம் ஆகும். "குறிப்பிட்ட கருத்துக்குப் பின் மறைந்திருக்கும் பொது உண்மையையும், காட்சித் தோற்றத்துக்குப் பின் மறைந்திருக்கும் உண்மை தன்மையையும் கண்டறிய முற்படுவதே தத்துவம் என்கிறார் ரேமாண்ட் (Nagarajan, 2009a).

கல்வியும் தத்துவமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. கோட்பாட்டுப் பக்கத்தை தத்துவம் என்றும், செயல்பாட்டு பக்கத்தை கல்வி என்றும் கூறலாம். பாடத்திட்ட ஏற்பாடு, கற்பிக்கும் முறைகள், ஆசிரியரின் செயல்பாடு, மாணாக்கரின் ஒழுக்கம் ஆகிய கல்விக்கூறுகளைத் தத்துவ பிரிவுகளுக்கு ஏற்ப ஆராய்ந்து முடிவுகளைப் பெறுதலே கல்வித்தத்துவம் ஆகும். கல்விச் செயல்முறைகளின் குறிக்கோள்களை தீர்மானிப்பது தத்துவம் எனில், கல்விதான் தத்துவ நெறிமுறைகளைப் பரப்பும் சாதனமாக அமைந்துள்ளது. இதன் மூலம் கல்விக்கும் தத்துவத்திற்கும் நெருங்கியத் தொடர்பு இருப்பதை அறிய முடிகிறது.

## விவேகானந்தரின் கல்வித்தத்துவம்

நரேந்திரநாத் என்னும் இயற்பெயருடைய சுவாமி விவேகானந்தர் 1863-ஆம் ஆண்டு கல்கத்தாவில் பிறந்தார். ஆழ்ந்து படிப்பதிலும், செய்திகளின் உண்மைத் தன்மையை அறிவதிலும் ஆர்வமுடைய இவர், ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு உடையவர். உலகெங்கும் சுற்றி மக்களிடையே மனிதநேயம், சகிப்புத்தன்மை, ஒற்றுமை உணர்வு ஆகியவற்றை வளர்க்க முயன்றார். ஆன்மீகத்தையும் அறிவியலையும் இணைப்பது மூலமே மனிதகுலஉயர்வு ஏற்பட முடியும் என்றார். "விழிமின், எழுமின், இலக்கை எட்டும் வரை அயராது உழைமின்" என்று இளைஞர்களுக்கு அறைக்கூவல் விடுத்தார்.

கல்வி பற்றி இவர் குறிப்பிடும் பொழுது, மூளைக்குள் திணிக்கப்பட்டு ஜீரணமாகாமல் வாழ்நாள் முழுவதும் கலகம் செய்யும் தகவல்கள் கல்வியாகாது. அறிவுத் தேடலை ஊக்குவித்து, மனவலிமையை பெருக்கி, நற்பண்புகளை வளர்த்திடுவதே கல்வியாகும். வயிறு வளர்க்க வழி காட்டுவது கல்வியாகாது. உயர் மதிப்புகளைப் போற்றி கடைபிடிப்பதற்கான உந்துதலை ஏற்படுத்துதலே கல்வியாகும். அதாவது மனிதனிடமுள்ள முழுமையை மேலும் முழுமையுறச் செய்வதே கல்வி. ஒவ்வொருவரின் மனமும் எல்லையற்ற அறிவையும் ஆற்றலையும் கொண்டுள்ளது. அவற்றை மூடிக்கிடக்கும் திரைகளை விலக்கித் தானே கண்டறிதல் தான் கல்வி கற்றல் என்பதாகும். மேலும் கல்வி என்பது குழந்தைகளின் இயல்பான வளர்ச்சியை தூண்டுவதாக அமைய வேண்டும் என்றார் (Nagarajan, 2009a).

கல்வியின் உன்னத நோக்கங்களாக முழுமையான மனிதனை உருவாக்குதல், மக்களிடையே உடல் வலிமை, மனவலிமை, நல்லொழுக்கம், தன்னம்பிக்கை ஆகியவற்றை வளர்த்தல், உலக மக்கள் அனைவரையும் உடன் பிறந்தோராகக் கருதும் மனப்பான்மையை உருவாக்கிடுதல் முதலியவற்றை குறிப்பிடுகிறார்.

கல்விக் கலைத்திட்டமானது பன்முகத்தன்மை கொண்டதாகவும், அறிவு வளர்ச்சி மற்றும் தொழில் திறன் வளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்தும் விதமாகவும், கலைத்திட்டத்தில் சேர்க்கப்படும் பாடங்கள் குழந்தையின் ஒட்டுமொத்த ஆளுமை வளர்ச்சியை கருத்தில் கொண்டதாகவும் அமைய வேண்டும் என்றார்.

பெண் கல்வியை வலியுறுத்திய விவேகானந்தர் அவர்களுக்கு என்று தனியான கலைத்திட்டத்தை பரிந்துரைத்தார். இதில் சமயநெறிபோதனை, தையல்கலை, ஆடை வடிவமைப்பு, ஓவியம், நிலறப்படம் எடுத்தல் போன்ற நுன்குலைகள் வலியுறுத்தப்பட்டன. இவற்றோடு பெண்கள் தற்காப்பு கலைகளிலும் பயிற்சி பெற்று, வீரம் துணிச்சல் போன்ற பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். பெண் ஆசிரியர்களே பெண்களுக்குக் கல்வி அளித்திடல் வேண்டும். கல்வியும் பக்தியும் கொண்ட பெண்களே மகான்களை தோற்றுவிக்க முடியும். பெண்களின் ஆற்றல் அதிகரிக்கும் போது, அவர்களின் குழந்தைகளும் தமது உன்னத செயல்களால் நாட்டுக்கு பெருமை சேர்ப்பர். பெண் கல்வியால் நாட்டில் பண்பாடு, அறிவு, ஆற்றல், அர்ப்பணிப்பு ஆகிய அனைத்தும் உயிர்த்துடிப்புடன் மிளிரும்.

கல்வி கற்பித்தல் முறையில் காட்சி-கேள்வி பொருட்களின் பயன்பாட்டை ஆதரித்த இவர், பல்வேறு கற்பித்தல் முறைகளை ஒப்புக்கொண்டாலும், அனுபவங்கள் மூலம் பெறும் கல்வியே யாவற்றிலும் உயர்ந்தது என்று உரைத்தார். மாணவர்கள் தான் பெறும் அனுபவங்களை மனனம் செய்து ஆராய்ந்தறிதல் மூலம் உண்மையை உய்த்துணர வேண்டும் என்றார்.

கற்பிக்கும் ஆசிரியர் அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட ஒழுக்க சீலராகவும், நன்னடத்தைச் சுடராகவும் பிரகாசித்து, மாணவர்களுக்கு சிறந்த முன்மாதிரியாக விளங்க வேண்டும் என்றார். மாணவர்களிடம் இரக்கமும் கருணையும் கொண்டு இருத்தலோடு, அவர்கள் நிலைக்கு இறங்கி வந்து தனது ஆளுமை மூலம் மாணவர்களிடம் ஆன்ம ஞானத்தை பாய்ச்ச வேண்டும் என்றார் (Nagarajan, 2009b).

## ரூஸோவின் கல்வித் தத்துவம்

நவீன கல்வி முறைக்கு வித்திட்ட ரூஸோ 1712 - ஆம் ஆண்டு ஜெனிவாவில் பிறந்தார். சிறுவயதிலேயே தாய் இறந்துவிட கடிகாரத் தொழிலாளியான தந்தையால் வளர்க்கப்பட்டார். கிராமப் பள்ளி ஆசிரியர் ஒருவரிடம் ஆரம்பக் கல்வி கற்றார். பள்ளிப் படிப்பில் நாட்டம் இல்லாததால், படம் வரைதல், வண்ணம் தீட்டுதல், தோட்டக்கலை ஆகியவற்றில் ஈடுபட்டார். தன் இளம் பிராயத்தில் எந்த ஒரு தொழிலிலும் நீடித்து இராமல், பல இடங்களையும் சுற்றி வந்து பலதரப்பட்ட மக்களையும் சந்தித்ததினால் நிறைய அனுபவ அறிவு ஏற்பட்டது. 1750 - ஆம் ஆண்டு 'கலை மற்றும் அறிவியலின் முன்னேற்றம்' (The progress of Art and Science) என்று நூல் எழுதி பிரபலமானார். 1762 - இல் அவரது புகழ்மிக்க இரண்டு நூல்கள் 'சமூக ஒப்பந்தம்' (Social Contract), எமிலி அல்லது கல்வியைப் பற்றி (Emile or Concerning Education) வெளிவந்து ஐரோப்பாவில் மாபெரும் புரட்சியைத் தோற்றுவித்தது. ரூஸோ அடிப்படையில் ஒரு இயற்கை விரும்பி. 'எமிலியும்' இந்த இயற்கை சித்தாந்தத்தின் விளைபயனே. ஐரோப்பாவின் அன்றையக் கல்வி நடைமுறைகளைச் சாடும் நூலாக இந்நூல் அமைந்துள்ளது (Nagarajan, 2009a).

ரூஸோவின் கல்வி முறை இயற்கையை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. இயற்கையின் சூழலில் குழந்தைகள் கல்வி கற்க வேண்டும். குழந்தையின் வளர்ச்சி நிலை, ஆர்வங்கள், உள்ளார்ந்த திறன்கள் ஆகியவற்றிற்கேற்ப கல்வி அளிக்க வேண்டும். கல்விச் செயல்முறைகள் யாவும் குழந்தையையும் அதன் தனித்தன்மையையும் மையமாக வைத்தே அமைய வேண்டும். புத்தகங்கள்

மூலம் பெறப்படும் அறிவையும் வாய்மொழிக் கல்வியையும் ரூஸோ வன்மையாக எதிர்த்தார். கல்வியில் 'குழந்தைகளுக்கு முழு சுதந்திரம் அளித்தல்' என்னும் கருத்தை முன் வைத்தார்.

கல்வியின் நோக்கங்களாக சுய வெளிப்பாடு மூலம் உள்ளார்ந்த திறன்களை மலரச் செய்தல், குழந்தைகள் தங்களின் தனித்தன்மையை வளர்த்துக் கொள்ள உதவுதல், வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெற ஒவ்வொரு குழந்தையையும் ஆயத்தப்படுத்துதல் போன்றவற்றை குறிப்பிடுகிறார் (Nagarajan, 2009b).

கல்விக் கலைத்திட்டம், குழந்தையின் வளர்ச்சி நிலை ஒவ்வொன்றிலும் அது வெளிப்படுத்தும் ஆர்வத்தை அடிப்படையாக வைத்தே அமைக்கப்பட வேண்டும். குழந்தை தன்னை நிலை நிறுத்திக் கொள்ளவும், சிறப்பாகச் செயல்படவும் துணை புரியக்கூடியப் பாடங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கருதி, அடிப்படை அறிவியல், கைத்தொழில்கள், உடற்கல்வி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தார்.

பெண் கல்வி பற்றி குறிப்பிடும் பொழுது, அவர்களுக்கென்று தனியான பாடத்திட்டங்களான, வீட்டை நிர்வகித்தல், தையல் வேலை, எம்ப்ராய்டரி, சமய போதனை போன்றவற்றை அளிப்பதால், பெண்கள் சிறந்த வாழ்க்கை துணைவிகளாகத் திகழ முடியும் என்று கருதினார்.

கற்பித்தல் முறைகள் உற்று நோக்குதல் மூலமும், சுய அனுபவங்கள் மூலமும் நிகழ வேண்டும். செய்து கற்றல், சிறு குழந்தைகளுக்கு விளையாட்டு மூலம் கற்பித்தல், தானே கண்டறியும் முறை முதலிய முறைகளைக் கற்பித்தலில் புகுத்தினார் (Nagarajan, 2009c).கற்பித்தலில் ஆசிரியர், மாணவர் கற்றலுக்கு மேடை அமைத்துத் தருபவராகவும், கற்றல் நிகழ்வதை உற்று நோக்கிக் கண்காணிப்பவராகவும் செயல்பட வேண்டும் என்று ரூஸோ கருதினார்.

## விவேகானந்தர் ரூஸோ கல்வி முறைகள் ஓர் ஒப்பிட்டுப் பார்வை

அட்டவணை

| வ. எண் | ஒப்பிடும் அடிப்படை | விவேகானந்தர் | ரூஸோ |
|---|---|---|---|
| 1 | தத்துவம் | ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டது | இயற்கையை அடிப்படையாகக் கொண்டது |
| 2 | குழந்தைக் கல்வி | குழந்தைகளின் இயல்பான வளர்ச்சியைத் தூண்டுதல் | குழந்தைக்கு முழுச்சுதந்திரம் அளித்தல், இயற்கை சூழலில் கல்வி கற்றல் |
| 3 | தனிநபர் கல்வி | மனிதனிடமுள்ள முழுமையை மேலும் முழுமையுறச் செய்தல் | வளர்ச்சி நிலை, ஆர்வங்கள், உள்ளார்ந்த திறன்கள் ஆகியவற்றிற்கேற்ப கல்வி அளித்தல் |
| | பெண் கல்வி | சமயநெறி போதனை, மனையியல், தையற்கலை, ஆடை வடிவமைப்பு, ஓவியம் நிழற்படம் எடுத்தல், தற்காப்புக் கலைகள் போன்ற தனிப்பட்ட பாடத்திட்டங்கள் | சமய போதனை, வீட்டை நிர்வகித்தல், தையல் வேலை, எம்ப்ராய்டரி போன்ற தனிப்பட்ட பாடத்திட்டங்கள் |
| 4 | எதிர்ப்பு | கல்வி திணிக்கும் செயலாக இருக்கக் கூடாது | புத்தகங்கள் மூலம் பெறப்படும் அறிவுக்கும், வாய்மொழிக் கல்விக்கும் எதிர்ப்பு |
| 5 | கல்வியின் நோக்கம் | முழுமையான மனிதனை உருவாக்குதல், உடல் வலிமை, மன வலிமை, நல்லொழுக்கம், தன்னம்பிக்கை வளரச் செய்தல் | உள்ளார்ந்த திறன் மலரச் செய்தல், தனித்தன்மையை வளர்த்துக் கொள்ளுதல், வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெற |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆயத்தப்படுத்துதல் |
| 6 | கற்பித்தல் முறைகள் | காட்சி கேள்வி பொருட்களின் பயன்பாடு, அனுபவங்கள் மூலம் பெறப்படும் கல்வி | உற்று நோக்குதல், செய்து கற்றல், விளையாட்டு மூலம் கற்பித்தல், தானே கண்டறிதல், சுய அனுபவக் கல்வி |
| 7 | ஆசிரியர் பங்கு | மாணவர்களின் நிலைக்கு இறங்கி கல்வி கற்பித்தல், ஊக்குவித்தல் | கற்றல் நிகழ்வை கண்காணித்தல், மாணவர்களின் முன்னேற்ற வாழ்வுக்கு உதவுதல் |
| 8 | ஒழுக்கமும் கட்டுப்பாடும் | மாணவர்களது வளர்ச்சிக்கு சுதந்திரம் அளித்தல், தொடக்க நிலைகளில் மாணவரை வெளிக்கட்டுப்பாடுகளால் ஒழுங்குப்படுத்தி, மாணவர்கள் முதிர்ச்சி பெற தொடங்கியதும் கட்டுப்பாடுகள் விளக்கிக் கொள்ளப்பட்டு சுய கட்டுப்பாட்டுடன் சுதந்திரமாக இயங்க ஊக்குவித்தல் | குழந்தைகளுக்கு முழு சுதந்திரம் அளித்தல், வெளிக்கட்டுப்பாடு மூலமோ தடை செய்தல் மூலமோ குழந்தைகளை நெறிப்படுத்த முயலாமல், இயற்கையை மீறும் போது அதனால் ஏற்படும் பின் விளைவுகள் குழந்தையை நெறிப்படுத்தி, ஒழுக்கத்தை நிலைநாட்டும் |

## கல்விமுறையின் போக்குகள் அன்றும் இன்றும்

சமுதாயத்தில் தமக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கித் தருவது கல்வி. ஐந்தறிவு உயிரினங்களில் இருந்து நம்மை வேறுபடுத்தி காட்டுவதற்கு அடிப்படையாக அமைவதும் கல்விதான்.

அன்றைய கல்வி முறையில் கல்வியின் தேவை மற்றும் முக்கியத்துவத்தை அறிந்தும், மனிதனின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப கல்வி முறையை பகுத்தும், எப்படி படிக்க வேண்டும், எதனைப் படிக்க வேண்டும் என்பதை உணர்ந்தும் படித்தனர்.

ஆனால் இன்றைய கல்வி முறையில் என்ன படிக்கிறோம், எதற்கு படிக்கிறோம் என்று புரியாமல், அறிவுத்திறனை வளர்த்துக் கொள்வதற்கு அதிக இடம் கொடுக்காமல், கட்டாயத்தின் அடிப்படையிலும், புரிந்து படிக்காமல், மனனம் செய்து படித்ததை அப்படியே பரீட்சையில் வாந்தி எடுத்து அதிக மதிப்பெண்களைப் பெறுவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டும் படிக்கிறார்கள். மதிப்பெண் மட்டுமே வாழ்க்கை அல்ல. அதையும் தாண்டி, நடத்தை மாற்றம், உலகை உணர்தல், கற்றதை வெளிப்படுத்துதல் போன்றவற்றிற்கும் கல்வி உதவ வேண்டும். மேலும், கல்வியை வியாபாரமாக்கும் அவல நிலையும் இன்று காணப்படுகிறது. கல்வி சுமையாக இல்லாமல் சுதந்திரமான மனநிலையில் படிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

## முடிவுரை

விவேகானந்தர் ரூஸோ போன்ற பல இந்திய மற்றும் மேலைநாட்டு கல்வியாளர்களின் கல்வி நோக்கம், கற்பித்தல் முறைகள், பெண் கல்வி போன்ற கல்வி குறித்த செய்திகள் பெரும்பாலும் ஒன்றை ஒன்று சார்ந்தும், ஒத்தும் காணப்படுகின்றன. ஆயினும் அவற்றில் சில இக்கால சூழ்நிலைக்கு ஏற்றதாக இல்லை. உதாரணமாக புத்தக அறிவைக் காட்டிலும், அனுபவங்கள் மூலம் பெரும் கல்வியே யாவற்றிலும் உயர்ந்தது என்று அவர்கள் கூறும் கருத்துப்படி, அனைத்து கல்விகளையும் அனுபவங்கள் மூலம் பெறுவது என்பது இக்கால சூழ்நிலைக்கு பொருந்துவனவாக அமையவில்லை. எல்லாவற்றையும் அனுபவம் மூலம் உணரும் அளவுக்கு வாழ்க்கை நீண்டு நெடியது அல்ல. மேலும், இயற்கையை மீறும் போது அதனால் ஏற்படும் பின் விளைவுகள் குழந்தையை நெறிப்படுத்தி ஒழுக்கத்தை நிலைநாட்டும் என்ற ரூஸோவின் கருத்துப்படி, குழந்தை கீழே குதித்து காலை உடைத்துக் கொண்டு ஊனமுற்ற பின் உயரமான இடத்தில் இருந்து குதிக்கக்கூடாது என்று கற்றுக்

கொள்வதால் என்ன பயன்?. எனவே குழந்தைகளுக்கு கல்வியில் முழுச் சுதந்திரம் அளித்து, கட்டுப்பாட்டையும் ஒழுக்கத்தையும் நிலை நிறுத்த முயல்வது அபாயகரமானது. கல்வி திணிக்கும் செயலாக இருக்கக் கூடாது என்ற அவர்களின் கருத்துக்கு மாறாக இன்று கல்வி திணிக்கும் செயலாக இருப்பது வருந்தத்தக்கது. வெறும் ஏட்டுக்கல்வியையும் மதிப்பெண்களையும் வைத்துக்கொண்டு வாழ்வில் சாதனை நிகழ்த்த இயலாது. கல்வி என்பது வேலை தேட மட்டும் அல்ல, அது வாழ்வை வாழ கற்பிக்க வேண்டும். ஒவ்வொருவரின் ஆற்றலையும் திறனையும் கண்டறிந்து, அதற்கு தகுந்தாற்போல் கல்வியை அளவோடு கொடுத்தால், அனைத்து குழந்தைகளும் வாழ்வில் வெற்றி அடைவது நிச்சயம்.

## References

Muthumohan, N. (2000) Iroppiyath Thathuvangal, Kavya Pathippagam, Banglore, India

Nagarajan, (2009a) Valarnthu varum Indiya Samuthayathil Kalvi, Ram Pathippagam, Chennai, India.

Nagarajan, (2009b) Katral Manitha valarchi thodarbana ulaviyal, Ram Pathippagam, Chennai, India.

Nagarajan, (2009c) Kalvi Pudhumaikalum Melanmaiyum, Ram Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License